செ.வெ.எண்.74 நாள்: 17.07.2019

**தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் சிவந்திபட்டி அணைக்கட்டு கால்வாய் மாண்புமிகு முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தில் புணரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

---

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் சிவந்திபட்டி அணைக்கட்டு மாண்புமிகு முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின்கீழ் கால்வாய் புணரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் பொதுப்பணித்துறை, கோரம்பள்ளம் நீர்வடி கோட்டத்தின் மூலம் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இப்பணிகள் சிவந்திபட்டி அணைக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தின் மூலம் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.07.2019) பார்வையிட்டு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கால்வாய்கள் புணரமைப்பு பணிகளை விரைவாகவும், தரமானதாகவும் வரும் மழைக்காலத்திற்குள் முடிக்க வேண்டும் என விவசாய சங்க பிரதிநிதிகள், பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ஆய்வின்போது, கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு கோரம்பள்ளம் கோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.மணிகண்டராஜ், உதவி பொறியாளர்கள் திருமதி.தங்கவிஜயராணி. திருமதி,பிரியதர்ஷினி, கோவில்பட்டி வட்டாட்சியர் (பொ) திருமதி.மல்லிகா, சிவந்திபட்டி அணைக்கட்டு விவசாய சங்க செயலாளர் திரு.கருப்பசாமி, பொருளாளர் திரு.மாரியப்பன் மற்றும் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் உடன்இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.